பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 08 2024 **FRIDAY** **6.30 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினர் நலன்களை பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. வக்ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதாவை ஆய்வு செய்வதற்கான நாடாளுமன்ற கூட்டுக்குழு அறிவிக்கப்பட்டுள்ளது.

3. தமிழகம் அனைத்துத்துறைகளிலும் முன்னோடி மாநிலமாக திகழ வேண்டும் என்ற நோக்கில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. மாநிலத்தில் உள்ள இரண்டாயிரம் மலை கிராமங்களில் மருத்துவ வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

5. பாரிஸ் ஒலிம்பிக் போட்டி நிறைவு விழா அணிவகுப்பில் இந்தியாவின் தேசியக்கொடியை **Sreejesh** மற்றும் மனுபாக்கர் ஏந்தி செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினர் நலன்களை பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இன்று தம்மை சந்தித்த ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினர் வகுப்பை சேர்ந்த பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடையே பிரதமர் இதனை தெரிவித்தார்.

முன்னதாக, ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டில் ஆண்டு வருமானத்திற்கான உச்சவரம்பு தொடர்பாக உச்சநீதிமன்றம் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பான கோரிக்கை மனுவினை பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரிடம் சமர்ப்பித்தனர்.

<<<<<<>>>>>

வக்ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதாவை ஆய்வு செய்வதற்கான நாடாளுமன்ற கூட்டுக்குழு அறிவிக்கப்பட்டுள்ளது. மக்களவையில் நிறைவேற்றப்பட்ட இதற்கான தீர்மானத்தின்படி இந்த குழுவில் 21 உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர். அடுத்த கூட்டத்தொடரின் முதல் வாரத்தின் கடைசி நாளில் இந்த குழு அறிக்கையை தாக்கல் செய்யும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ரயில்வேயின் செயல்பாடுகளை மேலும் மேம்படுத்துவதற்கு வகை செய்யும், சட்டத்திருத்த மசோதா மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இதனை தாக்கல் செய்து பேசுகையில், ரயில்வே வாரியத்திற்கு கூடுதல் அதிகாரம் வழங்குவதற்கான அம்சங்கள் இதில் இடம்பெற்றிருப்பதாக கூறினார்.

<<<<<<>>>>>

இயற்கை வேளாண்மைக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாக உரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இயற்கை வேளாண் திட்டங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றார்.

<<<<<<>>>>>

தமிழகம் அனைத்துத்துறைகளிலும் முன்னோடி மாநிலமாக திகழ வேண்டும் என்ற நோக்கில் தமது அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் புதிய கட்டிடங்களை இன்று திறந்துவைத்து அவர் பேசினார்.

கல்வித்துறையின் வளர்ச்சிக்காக தமிழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

கல்வி கற்பதற்கு எதுவும் தடையாக இருக்கக்கூடாது என்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் உள்ள இரண்டாயிரம் மலை கிராமங்களில் மருத்துவ வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று உதகமண்டலத்தில் உள்ள பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

<<<<<<>>>>>

கல்வித்துறையின் வளர்ச்சிக்காக தமிழக அரசு 44 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக மாநில அமைச்சர் திரு சக்ரபாணி கூறியுள்ளார். இன்று கிருஷ்ணகிரியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். கல்வித்துறையை போன்று சுகாதாரத்துறைக்கும் மாநில அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

யூடியூபர் சவுக்கு சங்கர் மீதான குண்டர் சட்டத்தை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு எஸ். எம் சுப்பிரமணியம், திரு சிவஞானம் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

தனிநபர்கள் மற்றும் அரசுக்கு எதிராக கருத்துக்களை தெரிவிப்போர் மீது உரிய சட்டப்பிரிவுகளின்கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, அரசியலமைப்புச்சட்டம் வழங்கியுள்ள கருத்து சுதந்திரத்தை பறிக்கும் வகையில் குண்டர் சட்டத்தை பயன்படுத்துவதால் எந்த முடிவும் ஏற்படாது என்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்களின் குறைகளை புரிந்துகொள்ளும் கருவியாக சமூக ஊடங்களை கருத வேண்டுமே தவிர, அவற்றை முடக்க முயற்சிக்கக்கூடாது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர். சமூக ஊடகங்களுக்கும் ஒழுங்குமுறை விதிகளை கொண்டுவர வேண்டியது அவசியம் என்றும் நீதிபதிகள் தங்களது உத்தரவில் குறிப்பிட்டுள்ளனர்.

<<<<<<>>>>>

அரசு போக்குவரத்துக்கழகங்களிலிருந்து ஓய்வு பெற்றவர்களின் நியாயமான கோரிக்கைகளை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஓய்வுபெற்ற போக்குவரத்துக்கழக ஊழியர்களுக்கு கடந்த எட்டரை வருடங்களாக அகவிலைப்படி உயர்வு வழங்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், கடந்த 18 மாதங்களாக ஓய்வுகால பணப்பலனும் வழங்கப்படவில்லை என்று அவர் அதில் தெரிவித்துள்ளார்.

எட்டு ஆண்டுகளுக்கு மேலாக போக்குவரத்துக்கழக ஊழியர்களின் இந்த கோரிக்கைகளை மாநில அரசு நிறைவேற்றாமல் இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றாமல் கார் பந்தயம் போன்ற தேவையற்ற செலவுகளுக்கு நிதி ஒதுக்கப்படுவதாகவும் திரு அண்ணாமலை குறை கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 32 பேர் கைது செய்யப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது என்று பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண தேவையான நடவடிக்கைகளை மத்திய – மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலர் திரு முத்தரசனும், இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள மீனவர்களை மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், வேலூர், திருப்பத்தூர் உள்ளிட்ட ஆறு மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் கூறினார்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கன்னியாகுமரி மாவட்டம் தெங்கம்புதூர் பகுதியில் நாய்களுக்கான கருத்தடை சிகிச்சை மற்றும் தடுப்பூசி மையத்தை மேயர் திரு மகேஷ் இன்று திறந்துவைத்தார்.

--------------------

பெரம்பலூர் மாவட்டத்தில் போதைப்பொருள் இல்லா தமிழகத்தை ஏற்படுத்துவது தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவது குறித்த ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் திருமதி கிரேஷ் பச்சாவு தலைமையில் இன்று நடைபெற்றது.

---------------

நாமக்கல் மாவட்டத்தில் 50 பள்ளிகளில் அறிவியல் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

----------------

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் வனப்பகுதியில் ரோந்து சென்ற வேட்டை தடுப்பு காவலர் காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்தார்.

---------------

சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட அரசு பள்ளிகளில் நாளை தொடங்கி, 31-ஆம் தேதிவரை நான்கு கட்டங்களாக கல்வி மேலாண்மைக்குழு கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் ஈட்டி எறிதல் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற நீரஜ் சோப்ராவை பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைபேசியில் தொடர்புகொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

ஒலிம்பிக் போட்டி நிறைவு விழா அணிவகுப்பில் இந்தியாவின் தேசியக்கொடியை ஹாக்கி அணியின் கோல் கீப்பர் **Sreejesh**–ம், மனுபாக்கரும் ஏந்தி செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மகளிர் 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா இறுதிச்சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பினை இழந்தது.

------

இத்தாலியில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் – அர்ஜுன் கதே இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 6-3 என்ற செட் கணக்கில், இத்தாலியின் **Giorgio Ricca - Andrea Picchione** இணையை வென்றது.

**<<<<<<END>>>>>**